Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 29 (13 - 07 - 1991) சனிக்கிழமை ஓசை: 145


## அவசர அனுமதிகள் இடைநிறுத்தம்

(நமது நிருபர்)

வடபகுதியில் வெளியே செல்வோருக்காக அவசர அனுமதி வழங்குதல் 13-07-91 ஆகிய இன்று முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வவிகாமம் பிரிவிலுள்ள சங்கானை, உரும்பராய் அலுவலகங்களில் அவசர அனுமதிக்காக விண்ணப்பித்து இதுவரை கிடைக்காதோர் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவில் 4ஆம் நாளாக கடும் மோதல் தொடர்கிறது

## தடைமுகாம் - முக்கிய தளம்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாம் பகுதியில் மோதல் ஆரம்பித்து நான்காவது நாளான நேற்று இரவும் கடும் மோதல் நடைபெற்றது. நேற்று மாலை ஆரம்பித்த இம் மோதல் அதிகாலை செய்தி அச்சுக்குப் போகும்வரை நடைபெற்றவண்ணமுள்ளது.

ஆனையிறவு முகாமைச் சூழ இம் மோதல்கள் இடம்பெற்று வரினும் ஆனையிறவு தடை முகாம் பகுதியிலேயே இம் மோதல் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

நேற்றுமாலை இம்மோதல் ஆரம்பமாகியது. விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு எதிராக இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படையினர் குண்டுவீச்சைத் தொடர்ச்சியாக வீசுகின்ற போதும், இராணுவத்தின் இலக்குகளை நோக்கி புலிகள் முன்னேறிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளின் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக விமானப் படை விமானங்கள் புலிகளின் இலக்குகளை நெருங்க முடியாதுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மோதல் தொடர்ந்த வண்ணமிருப்பதால் சேதவிபரங்கள் பற்றி அறியமுடியாதுள்ளது.

## 3 ஆம் நாள் இரு முனைகளில் புலிகள்-இராணுவம் மோதினர்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் இரு முனைகளில் மூன்றாவது நாளாகக் கடும்மோதல் நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு மோதல் சம்பவம் ஆனையிறவு தடைமுகாம் நோக்கி முன்னேறிய விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்றது. இரவு 11-30க்கு ஆரம்பமாகிய இம்மோதலில் இயந்திரத் துப்பாக்கிகள், சிறுரக பீரங்கிகள், கைக்குண்டுகள் வெடிமருந்துக் கலன்கள் என்பன பயன்படுத்தப்பட்டன.

அதிகாலைவரை நீடித்த இம்மோதலின்போது புலிகள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. இம்மோதலில் இராணுவத் தரப்பினருக்கும் சேதம் ஏற்பட்டதாயினும் அதுபற்றிய விபரம் தெரியவில்லை. புலிகள் தரப்பிலும் பலர் வீரமரணமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இரண்டாவது மோதல் சம்பவம் புலிகள் தாம் முதலில் கைப்பற்றிய உப்பளம் உல (4ஆம் பக்கம் பார்க்க)

## மோதலில் மீட்ட ஆயுதங்கள்

- ★ எம். ஜீ 03-01 மேதைக சுடுகுழல் - 2 ஸ்ராண்ட் 01
- ★ ஏ. கே. எல் எம். ஜி -02 றம் மகசீன் ; 18 லிங்-440
- ★ 40 எம். எம் ரி. 69 ரக ஆர். பி ஜி. - 3 ஷெல்-70 புரப்லர் - 42
- ★ 203பிஸ்டல் - 03, 40 எம். எம். ஷெல் 42
- ★ 60 எம். எம். மோட்டார் - 03, ஷெல் - 40, பராலைற் - 11, பூஸ்டர் -160
- ★ 2 அங்குல மோட்டார்-01
- ★ டி 81 ரக துப்பாக்கி - 01 ரைபிள் கிரனைட் -46
- ★ டி. 56-1 ரகத்துப்பாக்கி -02, மகசீன் - 15
- ★ டி. 56 - 2 - 02
- ★ டி. 56 புதிய ரகம் - 01
- ★ ஆர். ரி. ரி. ஸ்ராண்ட் - 01
- ★ நைட் விசன் - 01

(4ஆம் பக்கம் பார்க்க)

## உல்லாசபயணிவிடுதிமோதலில் வீரமரணமடைந்தோர் விபரம்

(ஆனையிறவு)

ஆனையிறவு உப்பளம் உல்லாச விடுதிமீதான தாக்குதலினமான கடந்த பத்தாம் திகதி சிறிலங்கா இராணுவத்துடன் மோதி வீர மரணமடைந்த போராளிகள்விபரம் வருமாறு:

- ★ சியாம் (இராசரட்ணம் கில்லி ஜோசப் இல. 25 வேம்படி, யாழ்ப்பாணம்)
- ★ பரன் (சிங்காரம் அம்பழகன் வல்லிவிளான் குளம் மாங்குளம்)
- ★ மாணிக்கதாஸ் (ராசநாகேந்திரன் தச்சன்குளம் வவுனியா)
- ★ கௌசலன் (சக்திவேல் நாகேஸ்வரன் செக்கட்டிப் புலம் வவுனியா)
- ★ காந்தன் (கணபதி பத்மநாதன் ஐயன்தோணி, ஏறாவூர் மட்டக்களப்பு)
- ★ சித்திக் (தவானந்தவேல் விக்னேஸ்வரன் தெனியவை வல்வெட்டித்துறை)

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணமடைந்தோருக்கு தென்மராட்சியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு தடைமுகாம் யுத்தத்தில் வீரமரணமடைந்த போராளியின் உடல்கள் தென்மராட்சிப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி சோகத்தில் ஆழ்ந்தது.

வீதிகள் எங்கும் தோரணங்களும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன, கொடிகாமம், மிருசுவில், சாவகச்சேரி, வரணி... ஆகிய இடங்களில் (4ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிக்குடியிருப்பில் 10 தமிழர் கைது

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் கடந்த புதன் கிழமையன்று பத்துத் தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தேப்பூர் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவ முகாமிலிருந்து வெளியேறி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரே இவர்களைக் கைது செய்தனர்.

இவர்களில் மூவர் ஆசிரியர்கள் என்றும், ஐவர் மாணவர்கள் என்றும் மற்றும் இருவர் விவசாயிகள் என்றும் தெரிய வருகிறது.

## உப்புவெளியில் சமாதான தாதுகோபுரம்

(திருகோணமலை)

திருகோணமலைமாவட்டத்திலுள்ள உப்புவெளிக் கிராமத்தில் சமாதான தாதுகோபுரம் என்ற பெயரில் புத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இத்தாதுகோபுரத்தில் புனித சின்னங்களைப் பிரதிட்டை செய்யும் வைபவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

கிழக்கு மாகாணப் பிரதம சங்க நாயக்கரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்த வைபவத்தில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனவிரத்ன, அமைச்சர்கள்லலித் அத்துலத்முதலி, ஜோசப் மைக்கல் பெரேரா முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

## அனுமதி பெறவேண்டும்

வெளியிடங்களில் இருந்து வவுனியா வருபவர்கள் தங்கள் நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களில் தற்காலிகமாக (4ஆம் பக்கம் பார்க்க)

## போதனா வைத்தியசாலை அதிகாரிகள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சு யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளை கப்பலில் அனுப்பி வைத்துள்ளதாக அனுப்பிய தகவலை அடுத்து அங்கு சென்ற அதிகாரிகள் ஏமாற்றமடைந்தனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடைந்த 'மேஸ்குமாரி' என்ற கப்பலில் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சினால் யாழ். (4ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் கல்லூரி பாலிகாவித்தியாலயமானது

(யாழ்ப்பாணம்)

முதலாம், இரண்டாம் தர அதிபர்களுக்கான தேர்வுப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பரீட்சை நிலையமாகும்.

அனுமதிப் பத்திரத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சிங்களத்தில் பாலிகா மகா வித்தியாலயம் என்று மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலத்தில் சுண்டிக்குளி பாலிகா வித்தியாலயம் என்று தரப்பட்டுள்ளது

## இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு வாரகால நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவமும், விமானப்படை விமானங்களும் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அஞ்சி அதன் சுற்றுப்புறங்களில் இருந்து இடம் பெயர்ந்து வடக்கின் ஏனைய பகுதிகளிலும் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு வார நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு அரசாங்க அதிபர் சகல உதவி அரச அதிபர்களையும் பணித்துள்ளார்.

கடந்த வாரம் முதல் ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களை நோக்கி தொ (4ஆம் பக்கம் பார்க்க)

## வடபிராந்திய சிகைஅலங்கரிப்பாளர் சங்கம்

எமது தொழில் செய்யும் அனைவரும் உடனடியாக இரத்த தானம் செய்யுங்கள். செய்த பின் எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள். 17.7.91 அன்று புதன் கிழமை சமாசக் கூட்டம் காலை 9-00 மணிக்கு நடைபெற உள்ளது. கிளைச்சங்க நிர்வாகசபை உறுப்பினர் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல 1083 காங்கேசன்துறைவீதி
நாச்சிமார்கோவிலடி
யாழ்ப்பாணம்.

சங்கநிர்வாகம்

(R-1542)



## வாழ்வின் வசந்தம்

மணமக்கள் தேவையா?
எம்மிடம் மணமக்கள் நிறைய இருக்கிறார்கள் ஞாயிற்றுக் கிழமையில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம்.

(R-1540)


## இரத்ததானம் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)
சோண்டாவின் வடக்கு சிறிவாகீஸ்வரி சனசமூக நிலைய இளைஞர்கள் நேற்று முன் தினம் யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்ததானம் வழங்கினர்.



ரஞ்சித்
சின்னசாமி இராசு

ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்:
13 - 07 - 1961

தாயக மண்ணில்:
24 - 06 - 1990

திதி:
13 - 07 - 1991

- குடும்பத்தினர்
வட்டக்கச்சி.

(B/ 2804)


மங்களகரமான திறப்புவிழா

## அறிவழகன் விறகு விற்பனை நிலையம்

உங்களுக்குத் தேவையான கொத்து விறகு, கட்டை விறகு, காட்டுத்தடி, கப்பு, தீராந்தி, பலகை முதலியவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்ள நாடுங்கள் "அறிவழகன் விறகு விற்பனை நிலையம்".

திறப்பு விழா 13-07-91 (இன்று)
காலை 10.00 மணி.

## அறிவழகன்
விறகு விற்பனை நிலையம்,
பிரதான வீதி, கொழும்புத்துறை.

(R/ 1539)


# நினைவு கூருகின்றோம்...

1991-07-13



கப்டன் லாலா/ரஞ்சன்







மேஜர் விசு 2ஆம்லெப். சாலினி கப்டன் உஷா

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் தொண்டமனாற்றில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

கப்டன் லாலா/ரஞ்சன் (கனகநாயகம் ஞானேந்திரமோகன் - ஓடக்கரை, பருத்தித்துறை)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளி

1986ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்த எமது முகாம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் எமைப் பிரிந்த

நிசாந்தன் (கோணமலை செல்வாதரன் - ஆவரம்பதி)

தேவா (இராசசுந்தரம் சிறிகாந்தன் - யாழ்ப்பாணம்)

மன்னாரில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளால் கொல்லப் பட்ட 50ற்கு மேற்பட்ட தமிழர்கள்

வவுனியா, பாவற்குளம் 10-ம் யுனிற் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயிகள்

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்

1989ஆம் ஆண்டு கொழும்பில், அந்நியப்படைகளின் முகவர்களாகச் செயற்பட்ட தமிழீழத் தேச விரோதிகளான கூட்டணியினர் மீதான மரண தண்டனையை நிறைவேற்றுகையில் சிறிலங்காக் காவற் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

மேஜர் விசு (இராசையா அரவிந்தராம் - நெல்லியடி)

2ஆம்லெப். பீற்றர் (அலோசியஸ் - கிளிநொச்சி)

கப்டன் அறிவு/விக்னேஷ் (கனகசபை சிவானந்தன் - ஒட்டங்குளம்)

இன்பருட்டியில் சிற்றூர்தி ஒன்றின் மீது இந்தியப்படையினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 3 தமிழர்கள்

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

ராஜு (கருப்பையா இராசராசா - ஒட்டுசுட்டான்)

கொக்காவில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின் 3ஆம் நாள் போரில் வீரமரணமெய்திய

கப்டன் உஷா (வனிதாம்பிகை இராசையா - 3ஆம் வட்டாரம், முள்ளியவளை)

2ஆம்லெப். சாலினி (நளநீலவதனா அருணாசந்திரன் - வல்வெட்டித்துறை)

ஜெயா (சங்கரப்பிள்ளை கணேசன் - கப்பட்டபுளியங்குளம், வவுனியா)

அம்பாறை சொறிக்கல்முனையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு செல்வராசா

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

B/2803 - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி


## A/L 92

தாவரவியல்
திரு. பொ. ஐங்கரநேசன்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
14 - 7 - 91 (ஞாயிறு)

காலை 6-7 தாவர உடற்றொழிலியல்
காலை 7-8 தாவர இராச்சியத்தின் பிரிவினைகள்
பிற்பகல் 2-3 தாவர உடலமைப்பியல்

## யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/2797)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கேள்விப் பத்திர அறிவித்தல்

மூன்று புசல் நெல் கொள்ளக்கூடிய 1250 வெற்றுச் சாக்குகளை வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 1250 வெற்றுச் சாக்குகளை உடனடியாக வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன

கேள்விகள் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணமாக ரூபா 150/- காசுக்கட்டளை / தபால் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

பெயர்
முகவரி
வெற்றுச் சாக்கின் கொள்ளளவு
ஒன்றுக்கான விலை
வழங்கக்கூடிய தொகை

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப் பத்திரத்தைத் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகள் வழங்கலுக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 23 - 7 - 91 காலை 10.00மணிக்கு முன்னதாக கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 23 - 7 - 91 முற்பகல் 10 30 மணிக்குத் திறக்கப்படும்.

(B-2799) -பதிவாளர்

## சிந்தனைக்கு

கடந்த காலத்தை நினைவிற் கொள்ளாதவர், அதை மீண்டும் அனுபவிக்கும் தண்டனைக்கு ஆளாவர்.

— ஜார்ஜ் சாந்தாயனா

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 13.07 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# தவறான கணக்கிற்கு ஒரு பதிலடி

யாழ் குடாநாட்டின் நுழைவாயிலான ஆனையிறவில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும்போர் இடம் பெற்று வருகின்றது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவில் அமைந்துள்ள சிறிலங்காவின் பாரிய இராணுவ முகாமைத் தகர்த்தெறிந்து விடுவதற்குப் புலிகள் தீவிர தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

'ஆனையிறவில் தற்பொழுது நடைபெறும் மோதல் இதுவரை நடைபெற்றிராத கடுமையான மோதல்' எனச் சிறிலங்கா பாதுகாப்புத்துறை அமைச்சின் செயலாளர் வோல்டர் பெர்னாண்டோ பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். மேலும் அவர் முகாமைப் புலிகள் பிடித்து விடக் கூடாது என்பதற்காக இராணுவம் தொடர்ந்து போராடுகின்றது எனவும் தெரிவித்தார்.

அதேவேளை வேறோர் சிறிலங்கா இராணுவ அதிகாரி ஆனையிறவு முகாம் புலிகளிடம் வீழ்ந்து விடாது என நம்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாம், கொக்காவில், கொண்டச்சி இராணுவ முகாம்கள் போன்ற சிறிய முகாமல்ல. ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட புவியியல் ரீதியில் மிகவும் பாதுகாப்பான இராணுவ முகாமாகும். வடமாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்கள் பல புலிகளிடம் வீழ்ச்சி கண்ட போதிலும் கடல் வழித் தொடர்பின்றி முகாமைப் பாதுகாக்க முடியும் என்ற திடமான நம்பிக்கையுடனேயே சிறிலங்கா இராணுவ பீடம் இந்த முகாமை பராமரித்து வந்தது.

இந்நிலையில், தற்பொழுது இந்த முகாம் புலிகளிடம் வீழ்ந்து விடுமோ என்ற அச்சம் சிறிலங்கா தரப்பினருக்குத் தோன்றியுள்ளது. முகாம் வீழ்ச்சி அடைந்தாலும் சரி / வீழ்ச்சி அடையாவிட்டாலும் சரி புலிகள் பற்றி அரசாங்கம் தப்புக்கணக்குப் போட்டிருந்தது என்பது மட்டும் உண்மை. புலிகளை வடக்கில் இருந்து ஆறுமாதத்தில் தேடி அழித்து விடுவோம் எனக் கூறிய இராணுவத்தினர் தற்பொழுது தமது முகாம் புலிகளிடம் வீழ்ந்து விடாது என உறுதிபடக் கூற முடியாது, நம்பிக்கை வெளியிடும் நிலையை அடைந்துள்ளார்கள். புலிகளைத் தேடி அழிக்க எண்ணியவர்களைப் புலிகள் தேடி அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் இராணுவ மேலாதிக்கத்தைப் பெற்று தமிழர் மீது ஒரு முடிவைத் திணிக்கலாம் என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் எண்ணத்திற்கு விடுதலைப் புலிகள் கொடுக்கும் ஒரு பதிலடியாகும்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழீழப் போராட்டம் பற்றி எப்பொழுதும் ஓர் தப்புக் கணக்குடனேயே செயற்பட்டு வந்துள்ளது, தமிழீழப் போராட்டத்தை இந்தியாதான் இயக்குகின்றது, தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது; இந்திய மண்ணே போராட்டத்தின் பாதுகாவல் அரணாகவுள்ளது என்பதே அது.

ஆனால், போராட்ட ஆரம்பகாலத்தில் ஓரளவு இந்தியாவின் உதவி இருப்பினும் தற்பொழுது அவ்வாறான நிலை இல்லை. அது ஒரு தப்புக் கணக்கு.

இந்திய மத்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும் விடுதலைப்புலிகள் மீது தீவிர நடவடிக்கை எடுத்திருக்கும் போது ஆனையிறவு முகாம் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சிறிலங்காவிற்கு இதை உறுதிப்படுத்தியிருக்கும். இந்தியா தமிழீழப் போராட்டத்தை நடத்தவில்லை, இந்திய மண் போராளிகளின் பாதுகாப்பு அரண் அல்ல, தமிழீழப் போராட்டம் சொந்த மண்ணில் இருந்து தமது சொந்தக் காலில் நின்று வழி நடத்தப்படுகின்றது என்பதை,

இந்நிலையில், மீண்டும் ஓர் முறை சிறிலங்கா அரசாங்கத்திற்கு தலைவர் பிரபாகரன் கூறியதை தமிழர் தரப்பில் இருந்து நினைவூட்டுவது பொருத்தப்பாடு உடையதாகும். தமிழருடைய பிரச்சினையைத் தொடர்ந்தும் இழுத்தடிக்கும் தன்மையைப் பிரேமதாசா அரசாங்கம் கைக்கொள்ளுமானால் எதிர்காலத்தில் புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச முடியாது. தமிழ் அரசுடன்தான் பேச வேண்டி வரும் என்பதே நாம் நினைவூட்ட விரும்புவதாகும்.

# தியாக தீபங்கள்

முதன் முதலில் சிங்கள இராணுவத்தின் மீது நடந்த தாக்குதலை (காங்கேசன்துறை வீதியில்) நடத்திய பெருமையைத் தனதாக்கிக் கொண்ட கப்டன் ரஞ்சன், 1983-ல் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட சரித்திரத் திருப்புமுனையையும் தமிழீழப் போராட்ட வரலாற்றில் உத்வேகத்தையும் ஏற்படுத்திய அந்தத் தாக்குதலிலும் பெரும்பங்கு வகித்தான்.

அத்துடன் விடுதலைப் புலிகள் ஆரம்பகாலத்தில் மேற்கொண்ட முக்கியமான தாக்குதல்களான சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தின் மீதான தாக்குதல், உமையாள்புரம் இராணுவத் தொடர் வண்டி மீதான தாக்குதல், கந்தர்மடம் தேர்தல் வாக்களிப்பு நிலையத்தின் மீதான தாக்குதல், பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தனா மீதான தாக்குதல், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் மீதான தாக்குதல், புலிகளை அழிப்பது பற்றி யாழ். செயலகத்தில் இராணுவத்தினரும் கூட்டணியினரும் ஆலோசனை நடத்த இருந்த மாநாட்டு மண்டபம் மீதான தாக்குதல், விடுதலைப் புலிகள் பற்றி சிங்கள அரசுக்கு தகவல் கொடுத்துவந்த பொலிஸ் அதிகாரி நவரட்ணம் மீதான தாக்குதல் ஆகியவற்றிலும் கப்டன் ரஞ்சன் முக்கிய பங்கு வகித்தான்.

திருநெல்வேலி 13 இராணுவத்தினர் மீதான தாக்குதலின்போது இயக்கத் தலைவர் பிரபாகரன் G-3 தானியங்கித் துப்பாக்கியுடன் தெருவோரத்தில் ஒரு மதிற் சுவரைக் கவராக்கிக் கொண்டு கண்ணிவெடியில் சிக்கிய டிரக் வண்டியில் இருந்த இராணுவத்தினரை நோக்கி வேட்டுகளைத் தீர்த்துக் கொண்டிருந்தார். அவ்வேளை இராணுவத்தினரது துப்பாக்கி வேட்டினாலோ அன்றி வெடிகுண்டு வெடித்த சிதறல்களினாலோ அவர் தலைக்கு மேலே இருந்த மின்சாரக்கம்பி துண்டிக்கப்பட்டு கீழே விழுகிறது; பிரதான வீதியில் உள்ள அதிக அழுத்த மின்னோட்டமுள்ள கம்பி அது;

இதை அவதானித்த ரஞ்சன் மின்னல் வேகத்தில் செயற்பட்டு அதனை அகற்றி விடுகிறான். அந்தச் சண்டையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடுகளில் பெரும்பாலானவை தலைவர் பிரபாகரனும் ரஞ்சனும் நின்ற இடத்தையே இலக்காகக் கொண்டிருந்தன. சண்டை நடந்து கொண்டிருக்கும் போதும் கூட தசாவதானியாகத் திகழ்ந்து தலைவர் பிரபாகரன் உட்பட அனைவருக்கும் வரவிருந்த ஆபத்தை தவிர்த்தவன் ரஞ்சன்.

ஆயுதத் தாக்குதலில் தனது தனித்திறமைக் காட்டிய கப்டன் ரஞ்சன் அரசியலிலும் மிகுந்த சிந்தனைத் தெளிவுள்ளவனாக இருந்தான். இயக்கத்தின் இராணுவ அரசியல் நடவடிக்கைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பதிலும், அரசியல் மாற்றங்களை ஆயுதத் தாக்குதல்கள் மூலம் ஏற்படுத்த முடியும் என்பதில் கப்டன் ரஞ்சன் அசையாத நம்பிக்கை



விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கப்டன் லாலா/ ரஞ்சன்(க. ஞானேந்திரமோகன்) அவர்களின் ஏழாவது நினைவு தினம் இன்றாகும். அவரை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை வெளியாகிறது. இக்கட்டுரையின் மிகுதி நாளை வெளிவரும்.

கொண்டிருந்தது மட்டுமல்ல, அதனைச் செயலிலும் காட்டினான்.

பாதுகாப்பு மாநாடு என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் போராளிகளை ஒழிப்பதற்காக யாழ் செயலகத்தில் சிங்கள இராணுவ உயர் அதிகாரிகளும், 'தமிழர் விடுதலைக்' கூட்டணியினரும் கூட இருந்த மாநாட்டு மண்டபத்தில் வெடிகுண்டு வைப்பதென்று விடுதலைப் புலிகள் தீர்மானம் எடுக்கின்றனர். அதன்படியே மாநாடு கூடுவதற்கு முதல்நாள் இரவு விடுதலைப் புலிகளால் மாநாடு கூட இருந்த மண்டபத்தில் வெடிகுண்டு வெடிக்கிறது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசாங்க ஜீப் வண்டிகள் எரியூட்டப்பட்டன. இந்த நடவடிக்கைளில் கப்டன் ரஞ்சன் முக்கியபங்கு வகித்தான். இத்தாக்குதல் பற்றி உரிமை கோருவதைவிட்டு யாரும் இதிக்கவில்லை ஆனால் ரஞ்சன் அத்தாக்குதல் பற்றி இயக்கம் உரிமை கோரவேண்டிய அவசியம்பற்றி அந்த இடத்தில் வலியுறுத்தினான்; வழமையாக புலிகள் இலச்சினை பொறித்த உரிமைகோரும் கடிதம் தயாரித்து எடுத்து வரப்படவில்லை; ரஞ்சனுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அருகில் நின்ற பூவரச மரத்து இலைகளைப் பிடுங்கி பக்கத்திலுள்ள மதிற் சுவர்களில் 'யாரைப் பாதுகாக்க பாதுகாப்பு மாநாடு?' என்று எழுதியதுடன் செயலக மாநாட்டு மண்டபத்தில் வெடிகுண்டு வைத்தது விடுதலைப் புலிகளே என்றும் எழுதுகிறான்.

மாநாடு கூடுவதற்குச் சில மணி நேரத்துக்கு முன்னால், மாநாட்டு மண்டபத்தில் வெடிகுண்டு வெடித்ததானது அரசு பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் கிலியை ஏற்படுத்தியதுடன், பத்திரிகைகளும் அன்று அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதின. அன்று ரஞ்சனின் நடவடிக்கையை இயக்க வீரர்கள் அனைவரும் வரவேற்றனர்.

முற்போக்கு என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு ''சித்தாந்தவேறுபாடு'' என்ற பெயரில் இயக்கத்துக்குள் குழப்பம் விளைவிக்கப் புறப்பட்ட ஒரு குழு ரஞ்சனை இயக்கத்தை விட்டுப் பிரிக்கப் பெரு முயற்சி எடுத்தது. தன்னைத் தேடிவந்த அந்தக் குழுவினருக்கே புத்தி சொல்லி, உணவு கொடுத்து உபசரித்துத் திருப்பி அனுப்பி வைத்தான் ரஞ்சன். அரசியல் தெளிவுடன் இருந்த ரஞ்சனை இயக்கத்தை விட்டுப் பிரிப்பதற்காகப் பல நாட்களாக அலைந்த அக்குழுவினர், ''இவனுக்காக இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு அலைந்தோம்'' என்று சலிப்புடன் முணுமுணுத்தபடியே தோல்வியுடன் திரும்பினர்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வெறும் ''பையன்களின்'' போராட்டமல்ல. அது மக்களின் போராட்டம் என்பதை உணர்த்தும் வகையில் ரஞ்சன் 10 04 84 அன்று இயக்க வீரர்களுடன் பெருமளவில் மக்களையும் திரட்டிக் கொண்டு சென்று, பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைத் தாக்கினான், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முதலாக மக்கள் அணி திரண்டு சென்று நடாத்திய தாக்குதல் இது தான். இதன்மூலம் மக்களின் போராட்ட உணர்வுகளும் வெளிப்பட்டன. பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது ரஞ்சன் முன்பொரு நாள் தமிழகம் செல்லும் வழியில் பொலிஸாரிடம் பறிகொடுத்த மோட்டார் சைக்கிளை அங்கிருந்து கைப்பற்றினான். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தகவல்களைச் சிங்கள அரசுக்குச் சேகரித்துக் கொடுத்த இரகசியப் பொலிஸ் சாஜன்ட் நவரத்தினத்தைப் பற்றியும், அவர் தன் பதவி உயர்வுக்காகச் சிங்கள அரசிற்குச் சேகரித்துக் கொடுத்த தகவல்களைப் பற்றிய ஆதாரங்களைக்கொண்ட ஆவணங்களையும் ரஞ்சன் பொலிஸ் நிலையத்திலிருந்து கைப்பற்றினான். ஆதாரபூர்வமாக இனத்துரோகி என்று நிரூபிக்கப்பட்ட இரகசியப் பொலிஸ் சாஜன்ட் நவரத்தினத்திற்கு 02 05 84 அன்று, பருத்தித்துறைப் பேருந்து நிலையத்தில் வைத்து மரண தண்டனை வழங்கினான்.

திருநெல்வேலித் தாக்குதலில் இயக்கத்தினருக்கு ஏற்படவிருந்த ஆபத்தைத் துரிதவேகத்தில் செயற்பட்டு தவிர்த்தது போலவே, எதிர்பாராத வேளைகளில், எதிர்பாராத வகையில் வந்த பல ஆபத்துக்களை ரஞ்சன் பல தடவைகள் தனது சமயோசிதத்தினால் விலக்கிக் கொண்டிருக்கிறான், தனது தோழர்களையும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றி இருக்கிறான்.

(நாளை தொடரும்)

## இலங்கையில் 1000 எயிட்ஸ் நோயாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயின் அறிகுறி கண்டு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில் முப்பத்தியாறு பேர் முழுமையான நோயாளிகள் என்றும் கொழும்பில் உள்ள மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

## சைக்கிள்களை அடையாளம் காட்டிப்பெறவும்

(நமது நிருபர்)

சைக்கிள் திருடர்களிடமிருந்து விடுதலைப் புலிகளால் நாவற்குழிப் பகுதியில் கைப்பற்றப்பட்ட மூன்று பெண்களின் சைக்கிள்களும், இரண்டு ஆண்களின் சைக்கிள்களும் தற்போது நாவற்குழி வீடமைப்புத் திட்டப் பிரதேசக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் நேரில் சென்று அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைப் பிரதேசத்துக்குள்ளும், நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குள்ளும் உள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களை இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஒன்று கூடும்படி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

# மூன்று தினங்களில் 215 பேர் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவ மனை இரத்த வங்கியில் கடந்த மூன்று நாட்களில் 215 பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

குடாநாட்டில் உருவாகிய புதிய போர் சூழ்நிலையைத் தொடர்ந்து மேற்படி எண்ணிக்கையானவர்கள் தாமாகவே முன்வந்து மொத்தம் சுமார் 168 பைந்த் இரத்தத்தை தானம் செய்துள்ளனர் இரத்ததானம் செய்தவர்களில் தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் அடங்குவர்.

# பல்கலையில் "பொண்டிங்"

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக இறுதி வருட மாணவர்கள் நேற்று முன்தினம் "பொண்டிங்" என்ற தமது வரலாற்றுச் சிறப்புமிக்க கேளிக்கையை நடாத்தினர்.

சேறும், நிறச்சாயங்களும் கலந்த கலவைகளை ஆண்களும் பெண்களும் மாறி மாறி தம்மை அடையாளம் தெரியாது போகுமளவிற்கு பூசிக் கொண்டனர். இடையிடையே மண்ணை வாரி ஒருவருக்கொருவர் எறிந்தும் நீரில் நனைத்து பின்னர் மண்ணில் போட்டு உருட்டியும் கொண்டனர். மாணவிகள் தலைவிரி கோலமாக ஆங்காங்கே ஒருவருக்கொருவர் எறிந்து கொண்டனர்

இறுதியில் ஒரு பொப்பிசை நிகழ்ச்சியுடன் வளாகத்தினுள் உள்ள வீதிவழியே சுற்றி வந்தனர்.

சனப்பெட்டிகளுடன் ஆனையிறவில் போராளிகள் இராணுவ முகாமைத் தாக்கிக் கொண்டிருக்கும் செய்திகளும், போராளிகளுக்கு இரத்ததானம் வழங்குவதற்காக மக்கள் முண்டியடிப்பதாகவும் வந்த செய்திகள் குவிந்து கிடந்தமையால் இந்தச் செய்தியை நேற்று எமது வாசகர்களுக்கு அறியத்தர முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ராஜீவ் கொலை விசாரணைக்கென தனி நீதிமன்றம் அமைப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலையை விசாரிக்கத் தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தனி நீதிமன்றத்தில் நீதிபதியாக எஸ் எஸ் சஜித் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவித்தல் தமிழக அரசால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதையடுத்து மேற்படி கொலை வழக்கைத் தனி நீதிமன்றத்திற்கு மாற்று மாறு செங்கல்பட்டு நீதிமன்றத்திடம் மனு ஒன்றை மத்திய புலனாய்வுத்துறை நேற்றுத் தாக்கல் செய்தது.

இந்தவழக்கை தனிநீதிமன்றத்துக்கு மாற்ற அனுமதி வழங்கிய செங்கல்பட்டு நீதிபதி வடிவேல்ரெத்தினம், வழக்கின் அடுத்த விசாரணையன்று குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் தனி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் இந்தத் தனி நீதிமன்றம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

# இந்திய. அமெரி. உறவு நெருக்கமடைய வேண்டும்

— நரசிம்மராவ்

(டில்லி)

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே மேலும் நெருங்கிய உறவுகள் ஏற்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

'நியூயோர்க் டைம்ஸ்' இதழுக்கு பேட்டியளித்த நரசிம்மராவ் இந்தியா வாஷிங்டனுக்கு விரோதமாக சோவியத் யூனியனுடன் சார்ந்து நிற்கிறது என்ற பழைய கண்ணோட்டம் பொருத்தமற்றது என்று தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்கா இந்தியாவுடன் அரசியல் தொடர்புகளை அதிகரித்து முதலீட்டையும் அதிகரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# சிவகாசியில் வெடி விபத்து; 33 பேர் கருகி மரணம்

தமிழ்நாட்டில் சிவகாசிக்கு அருகில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் முப்பத்தி மூன்று பேர் கருகிச் செத்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள், முப்பத்தைந்து பேர் கடுமையாகக் காயமடைந்துள்ளார்கள்.

இந்த விபத்து நேற்றுக் காலை 11 மணியளவில் சிவகாசிக்கு அருகில் 7 கி. மீ. தொலைவில் உள்ள மீனம்பட்டி என்ற இடத்தில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்டது. சக்கர வெடியைச் சோதிப்பதற்காகத் தரையில் தட்டியபோது அது தானாகத் தீப்பிடித்துக் கொண்டது என்றும், இது விபத்துதான் என்றும் பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் எண்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

---

இடம் பெயர்ந்த

டர்ச்சியான ஷெல் தாக்குதல்களும் விமானத் தாக்குதல்களும் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து அதன் சுற்றுப்புறங்களில் இருந்து இத்தாக்குதல்களுக்கு அஞ்சி வெளியேறியுள்ள மக்களுககே மேற்படி ஒருவார நிவாரணத்தை வழங்குமாறு நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் வேண்டுகோளை விடுத்துள்ளார். (ச)

---

அவசர

முறையே 13 ஆம் 14 ஆம் திகதிகளில் தத்தமது அவசர அனுமதி வழங்கும்அலுவலகங்களுக்கு சமுகமளிக்கும்படி போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் கோரியுள்ளனர்.

---

# உபசார வைபவம் ஒத்திவைப்பு

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் இன்று 13-7-91 நடைபெறவிருந்த வரவேற்பு உபசார வைபவம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என யாழ் தொழில் நுட்பக்கல்லூரி வணிக மாணவ மன்றம் அறிவித்துள்ளது.

விளம்பர இலக்கம் ஆர் 1548

# கல்லூரிக்கு சமுகம் அளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 1990, 91 92 93, ஆம் ஆண்டு உயர்வகுப்பின் அனைத்து மாணவர்களும், கல்லூரி ஆசிரியர்களும் இன்று காலை 9 00 மணிக்கு மேற்படி கல்லூரிக்கு தவறாது சமுகம் தருமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்

# நல்லூர் பிறேம் கைது

(கொழும்பு)

பலாங்கொடையிலுள்ள ஒரு வீட்டில் மறைந்திருந்ததாகக் கருதப்படும் நல்லூரைச் சேர்ந்த பிறேம் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ரஞ்சன் விஜேரட்ண கொலை மற்றும் கூட்டுப்படைத்தலைமையக குண்டு வெடிப்புகளோடு தொடர்புடையவர் என்றும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வெடிகுண்டு நிபுணரான ரவிக்குமார் என்பவரே இவ்விரு குண்டுகளையும் தயாரித்தவர் எனக் கூறியிருப்பதாகவும், சிறிலங்காப் பொலிசார் கூறியுள்ளனர்.

---

3ஆம் நாள்

லாச விடுதியில் இருந்து முகாம் நோக்கி முன்னேறிய போது ஏற்பட்டது.

இத்தாக்குதல் பற்றி மேலும் தெரியவருவதாவது. சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் பாரிய எதிர்த்தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கையில் இம்மோதல் ஆரம்பமானது.

இதைத்தொடர்ந்து விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் கடும் எதிர்த்தாக்குதலை சிறிலங்கா விமானப்படையை நோக்கி நடத்தின இதனைத்தொடர்ந்து விமானப்படை சற்றுப் பின்னடைய விடுதலைப் புலிகள் மிதிவெடிகளை அகற்றிக் கொண்டு இராணுவத்தினரின் அரண்களை நோக்கி முன்னேறி மிக அருகில் வைத்துத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. பின்னர் புலிகள் தாம் முன்னேறிய பகுதிகளில் தமது நிலைகளை அமைத்துக் கொண்டதாகவும் தெரிகிறது.

அதேவேளை முகாமின் உட்பகுதியில் இருந்து தொடர்ச்சியான பராவெளிச்சம் அடிக்கப் பட்டவண்ணம் இருந்தது.

இம் மோதல்களிலும் இராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் எண்ணிக்கை தெரியவில்லை.

---

அனுமதி

தங்குவதற்கு சிறிலங்கா பாதுகாப்புப்படை அதிகாரிகளிடம் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

போதனா

போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அறிவிக்கப் பட்டது. இந்த அறிவித்தலை நம்பிய பணிப்பாளர் மருந்துகளை பெற்று வருவதற்காக வாகனங்களை ஒழுங்கு செய்து அனுப்பியிருந்தார். அங்கே சென்றபோதுதான் எதுவித மருந்தும் அனுப்பி வைக்கப் படவில்லை என்ற விபரம் தெரியவந்தது. (ச)

# ஓய்வு பெற்ற பொலிசாரை சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் பொலிசில் சேவையாற்றி ஓய்வு பெற்ற சகல பொலிஸ் உத்தியோகத்தர்களையும்எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு காவல்துறை அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர்வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (ச)

# உணவு இறக்க அனுமதி கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதிக்கு வந்தடைந்த உணவுக் கப்பலில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குவதற்கு சிறிலங்கா கடற்படை அனுமதிவழங்கவில்லை இக்கப்பலில் இருந்து உணவுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் இறக்குவதற்கு அனுமதி தரும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினூடாக விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை எந்தப்பதிலும் கிடைக்கவில்லை

இதனால் இத்துறைமுகத்திற்கும், காங்கேசன்துறை முகத்திற்குமாக வந்தடைந்த இரு கப்பல்களிலும் எடுத்து வரப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் இம்மாவட்ட மக்களுக்கு விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடருமாயின் நிவாரண உணவு விநியோகம் மேலும் பாதிக்கப்படும் என்று யாழ். செயலக உயர் அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர். (ச)

---

உல்லாசப்பயணி

★ நிலாம்ஸ் (கனகரத்தினம் வதீஸ்வரன், சங்கத்தானை, சாவகச்சேரி)

★ பித்தூரன் (அன்ரனி ஜோர்ஜ் ஜெராட் 7 ஆம் வட்டாரம் பேசாலை, மன்னார்.

★ குமார் (லட்சுமணன் ராஜா இத்தூர், மட்டக்களப்பு)

★ தீபன் (சாமித்தம்பி தங்கேஸ்வரன் கண்ணியந்தீவு திருக்கோயில் அம்பாறை)

★ நியூட்டன் (குமாரசாமி சிவகுமார் நாவற்குழி, கைதடி)

★ மாறன் (சங்கரப்பிள்ளை கனகசிங்கம் பலாலி தெற்கு. கொடிகாமம்)

★ செந்தில் (பாலசுந்தரம் செல்வகுமார் நாவலயா மருதோடை, நெடுங்கேணி)

★ நிசானா (ஈஸ்வரி தங்கராசா ஆலங்கேணி, இண்ணியா)

★ சகாரா மகேஸ்வரி (பொன்னுச்சாமி கிரான், மட்டக்களப்பு)

★ பகிர்தா (சிவந்தினி சின்னத்தம்பி அன்னம்மாள்கோவிலடி, ஏழாலை தெற்கு)

★ கலித்தா (செந்தமிழ்ச்செல்வி சதாசிவம் பழம்பாசி நெடுங்கேணி)

★ ஜமுனா (சீதாலட்சுமி தியாகராஜா சாஸ்திரி கூழாங்குளம் - வவுனியா)

★ சோமதி (தியநாயகி மூத்தவேல் கிண்ணையடி, வாழைச்சேனை)

★ லோகா (கோமதி சக்திவேல் இதயநகர் கிளிநொச்சி)

★ தபேஷா (மஞ்சுளா அப்பையா கொண்டலடி லேன், நல்லூர்)

★ றூபியா (டயனி அலோசியஸ் செபஸ்தியார் கோவிலடி, மன்னார்)

★ அமரவதி (நவா பாலசிங்கம் மடுமாதா கோயிலடி, மன்னார்)

★ லோ (சின்னத்தம்பி அமிர்தலிங்கம் ஓட்டிசுட்டான், முல்லைத்தீவு)

★ சுதன் (செபமாலை ஜேசுதாஸ் யாழ்ப்பாணம் பிப்புக்குளம், மன்னார்)

உல்லாச விடுதியைக் கைப்பற்றிய பின்னர் அடுத்த நாள் (பதினோராம்)திகதிப் பகுதியில் இடம் பெற்ற மோதலில் ரமேஸ் என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இவர்கள் அனைவருக்கும் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# இரவு ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை காரைநகர் முகாம்களில் இருந்து குடாநாட்டின் கரை ஓரங்கள் மீதான ஷெல் தாக்குதல் நேற்று ஒன்பது மணியளவிலிருந்து தொடர்ந்து இடம் பெற்ற வண்ணம் இருந்தது.

# ஹெலி தாக்குதல்

(கொடிகாமம்)

நேற்று அதிகாலை ஆறு மணியளவில் தென்மராட்சிப் பகுதியில் பரவலாக ஹெலித் தாக்குதல் நடைபெற்றது. கொடிகாமம் பருத்தித்துறை வீதியால் வந்த வான்மீதும் பின்பு நுணாவில் கண்டிவீதி வழியாக வந்துகொண்டிருந்த லொறி ஒன்றின் மீதும் ஹெலி தாக்குதலை நடத்தியது. இதனால் சேதம் ஒன்றும் ஏற்படவில்லை. (86)

# ஜெனறேற்றர் மீண்டும் பழுது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் பொருத்தப்பட்ட ஜெனறேற்றர் 30 நிமிடங்களுக்குள் மீண்டும்பழுதடைந்தது

பல மாதங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் பழுதடைந்திருந்த ஜெனறேற்றர் ஒன்று திருத்த வேலைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது தெரிந்ததே. அது திருத்தப் பட்டு கடந்த வாரம் மீண்டும் கொண்டுவரப்பட்டு வைத்திய சாலையில் பொருத்தப்பட்டது. சுமார் முப்பது நிமிடங்கள் வரையுமே செயற்பட்ட பின் மீண்டும் அது செயலற்று விட்டது.

---

வீர

வர்த்தக நிலையங்கள் எதுவும் திறக்கப்படவில்லை அனைத்தும் கறுப்புக்கொடியுடன் காணப்பட்டன. இப்பகுதிகளில் எழுச்சிப்பாடல்களும் ஒலித்துக் கொண்டிருந்தன

தென்மராட்சியைச் சேர்ந்த உயிரிழந்த போராளிகளின் உடல்களும் ஏனைய சில போராளிகளின் உடல்களும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை நேற்று அதிகாலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில்வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. (லோ)

---

மோதலில்

★ ஐ எம். ரவைகள் -37000 லிங்குகள் - 1000

★ றேட்டோ ரவைகள்-12500 (லிங்குடன்)

★ 303 ரவைகள் - 600 பராலைற் 41

★ ஜே ஆர் கிரனைட் -131

★ டி என் டி கிரனைட்- 43

★ புகைக்குண்டு - 01

★ கிளைமோர்-08(பெரியது) 08 (சிறியது),03

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.